கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2015/2016 (செப்ரம்பர் 2018)

# FAS 2233 Art of film Appreciation and Tamil films

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களும் என ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி – I

01. முழு நீளத்திரைப்படக் கதைக் கட்டமைப்பின் போக்கினை மையப்படுத்தி பின்வருவனவற்றை விளக்குக.

(அ) முழு நீளத் திரைப்படமொன்றின் கதையும் திரைக்கதையும் (story and screen play of a full length feature film)

(10 புள்ளிகள்)

(ஆ) திரைப்படமொன்றின் கதைச் சிக்கல்களும் அச்சிக்கல்களுக்கான தீர்வுகளும்.

(10 புள்ளிகள்)

02. திரைப்படமொன்றில் இடம்பெறக்கூடிய முக்கிய தொழில்நுட்ப விடயங்களின் வகிபங்குகளை எடுத்துரைக்க.

(அ) கமரா தூரங்கள், அசைவுகள், பார்வைகள்

(10 புள்ளிகள்)

(ஆ) ஒலியமைப்பு மற்றும் ஒளியமைப்பு

(05 புள்ளிகள்)

(இ) படத் தொகுப்பு

(05 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுக்குச் சுருக்கமான விடையளிக்குக.

(அ) திரைப்படங்கள் மீதான வெவ்வேறு கருத்தியல் அணுகுமுறைகள் சார்ந்த திறனாய்வு

(10 புள்ளிகள்)

(ஆ) திரைப்படங்களில் ஒரே இயக்க மையம் கொண்ட எதிர்நிலைகள் இரண்டு (Pivotal Binary opposites in films)

(10 புள்ளிகள்)

## பகுதி – II

04. "தமிழ்த் திரைப்படங்கள் திறனாய்வுக்கு உட்படுத்தப்படுவதன்மூலமே அவை கட்டமைக்கும் மாயைகளைக் இனங்காண்பது சாத்தியம்" இக்கருத்தின்பாலான உங்கள் உடன்பாட்டை விளக்குக.

(20 புள்ளிகள்)

05. திரைப்படமொன்றில் இடம்பெறக்கூடிய குறியீடுகளைத் தகுந்த உதாரணங்கள்மூலம் விளக்குக.

(20 புள்ளிகள்)

06. தொடர்நிலை ஆய்வின்படி – விளாடிமிர் புரொப் முன்வைக்கும் நாட்டார் கதைகளுக்குரிய அம்சங்களும் கதாபாத்திர வடிவமைப்பும் நவீன திரைப்படங்களிலும் இடம்பெறுகின்றன. ஏதாவது தமிழ்த் திரைப்படமொன்றைத் தெரிவுசெய்து புரொப்பின் செயற்பண்புகளைப் பிரயோகிப்பதன்மூலம் கூற்றின் ஏற்புடமையை ஆராய்க.

(20 புள்ளிகள்)

07. சமூகவியல் ஆய்வு நோக்கில் திரைப்படமொன்றைப் பார்ப்பதன்மூலம் பார்வையாளர் அடையும் பயன்களும் மகிழ்ச்சியூட்டுதல்களும் (uses and gratification) தொடர்பில் எடுத்துரைக்குக.

(20 புள்ளிகள்)

*****